பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 கார்த்திகை 14 ஜ"ஹஜ் 18 இதழ் 290
யாழ்ப்பாணம் புதன்கிழமை 30-11-77

லாலா தயாரிப்பு

புதியமுறையில் சன்சயின் சோப தயாரிக்கப்பட்டு இலங்கைமுழுவதிலும் விற்பனையாகிறது
சன்சயின் சோபவை உபயோகித்து அதன் தரத்தை தெரிந்து கொள்ளுங்கள்

ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

லாலாசோப் தொழிற்சாலை
அச்சுவேலி

1,25,000 ரூபா கொள்ளை!

(கொழும்பு)

கொழும்புக் கோட்டையிலுள்ள ஒரு ஹோட்டலில் ஒரு லட்சத்து 25,000 ரூபா பெறுமதியான நகைகள், இரத்தினக் கற்கள், ரொக்கப் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது!

இந்த ஹோட்டலில் வேலைசெய்த இருவர் இந்தக் கொள்ளையைச் செய்துள்ளனராம். இவர்கள் தலைமறைவாகிவிட்டதாகப் பொலிசார் நேற்றுத் தெரிவித்தனர்.

கூட்டுறவுச்சங்க ஊழல், மோசடி:

5 முன்னாள் எம். பி.க்கள் மீது சட்ட நடவடிக்கை!

பேரவையில் அமைச்சர் ஹேரத் தகவல்

(கொழும்பு)

கூட்டுறவுச்சங்க ஊழல்களில் சம்பந்தப்பட்ட முன்னாள் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களுக்கு எதிராக விரைவில் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன என்று உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ்: பி. ஹேரத் நேற்று தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டம் மீது தொடர்ந்துநடைபெற்ற விவாதத்தில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்ட தகவலை அமைச்சர் வெளியிட்டார்.

''திஸமகார, ருவான்வெல, கொலன்ன, அவிசாவலை ஆகிய தொகுதிகளின் முன்னாள் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்கள் கூட்டுறவுச்சங்க ஊழல்களில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டு குற்றச்சாட்டுக்கள் விரைவில் சுமத்தப்பட விருக்கின்றன.

இதுசம்பந்தமாக சட்டமா அதிபருக்கு விளக்கிக்கூறப்பட்டுள்ளது. தேவையான எல்லா தஸ்தாவேஜுகளும், கோவைகளும் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன'' என்று அமைச்சர் ஹேரத் பேரவையில் தெரிவித்தார்.

''பண்டாரகம முன்னாள் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் கூட்டுறவுச் சங்க ஊழல்களில் சம்பந்தப்பட்டுச் சுமார் இரண்டு லட்சம் ரூபா மோசடி செய்துள்ளதாகவும், தேசியக் கடதாசிக் கூட்டுத்தாபனத்திலிருந்து நூற்றுக்கணக்கான ரீம் 'ரிஷு'க் கடதாசிகளைக் கொள்முதல்செய்து மோசடி செய்துள்ளதாகவும் அமைச்சர் ஹேரத் குறிப்பிட்டார்.

வேலணை 7 பேர் கொலை வழக்கு:

எதிரி சார்பில் 'நவமும்' 'சிவாவும்' ஆஜராவர்

(யாழ்ப்பாணம்)

வேலணை எழுவர் கொலை வழக்கில் மூன்று சாட்சிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் இவ்வழக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில், வேலணையில் 7 பேரைக் கொலைசெய்ததாக சுந்தாலிங்கம் என்பவர்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் சட்டத்தரணிகளான வி. என். நவரத்தினம், எம். சிவசிதம்பரம் ஆஜராக விருப்பதாக அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

சட்டப்பிரச்னைபற்றி விவாதிப்பதற்காக, டிசம்பர் 14ம் தேதிவரை வழக்கு பின் போடப்பட்டுள்ளது.

அரசடிவீதி ரூ. 22,660 கொள்ளை

சந்தேக நபர்களில் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசடி வீதி 22,660 ரூபா கொள்ளை தொடர்பாக நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நடந்த அடையாள அணிவகுப்பில் 3 சாட்சிகளால் சந்தேக நபர் இருவரில் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டார்.

யாழ். பதில் நீதிபதி திரு. எஸ். கனகரத்தினம் முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

சாட்சிகளான பொன்னம்மா, அன்னலட்சுமி, கனகசபை சிவசோதி, சிவச்செல்வம் கிருபைநாத் ஆகியோர் சந்தேகநபரான சுந்தசாமி இராசநாயகத்தை அடையாளம் காட்டி

[6-ம் பக்கம் பார்க்க]

'30 வருடமாக வடபகுதி புறக்கணிக்கப்படுகிறது'

(கொழும்பு)

கடந்த முப்பது ஆண்டுகளாக வடபகுதி புறக்கணிக்கப்பட்டே வருகிறது என்று உடுப்பிட்டி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. ரி. இராஜலிங்கம் நேற்று தேசிய அரசுப் பேரவையில் குற்றம் சுமத்தினார்.

''மகாவலி கங்கை அபிவிருத்திக்காக கோடிக்கணக்கில் பணம் செலவிடப்படுகிறது. ஆனால் வடபகுதியில் ஒரு கைத்தொழில் திட்டத்தையும்அரசுமேற்கொள்ளவில்லை'' என்று தெரிவித்த திரு இராஜலிங்கம்: ''இரணைமடுத் திட்டம் அப்படியே இருக்கிறதே! அரசாங்கம் ஏன் பாரபட்சமாக நடந்துகொள்கிறது?'' என்று வினவினார்,

ஒரு கட்டத்தில் பொலிஸாரின் நடவடிக்கைகளைக் கண்டித்த அவர், ''யாழ். மாவட்டத்தில் சிங்களப் பொலிஸார் தொடர்ந்து நினைத்த மாதிரி

(6-ம் பக்கம் பார்க்க)

அச்சுவேலி ப. நோ. கூ. ச. கொள்ளை:

பிணை குறைப்புக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

எதிரிகள் தொடர்ந்து றிமாண்டில்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கொள்ளை வழக்கில், எதிரிகளுக்குவழங்கப்பட்ட தலா 50,000 ரூபா பிணையைச் சிறிது குறைக்குமாறு எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் விடுத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம்.எம். அப்துல்காதர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞர்களான நா. அருமைச்சந்திரன், க. ரமணாகரன், த. உதயணன் ஆகியோர் அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத்தில் இவ்வருடம் செப்டம்பர் மாதம் 12-ம் தேதி சட்டவிரோதமாகக் கூட்டம்கூடி, காசாளரிடம் 40 ஆயிரம் ரூபா கொள்ளையடித்ததாகவும், பொதுநோக்குடன் கொள்ளையடித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான ஆர். ஈ. தம்பிரத்தினம். எஸ். யோகநாதன், கே. பி. எஸ். வரதராசா, கனக மனோகரன், எஸ். கே மகேந்திரன், த நகுலசிகாமணி ஆகியோர் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினார்.

''அரசை எவரும் கவிழ்க்க முடியாது'' —றெனி

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தின் முதலாவது பட்ஜட், புதுப்பணக்காரர்களுக்குப் பலத்த தாக்கத்தை ஏற்படுத்திஉள்ளதுஎன்று நிதி. திட்டமிடல் அமைச்சர் திரு. றெனி டி மெல் தெரிவித்துள்ளார்.

மாதம்பிட்டியாவில் வங்கிக் கிளையொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து இவ்வைபவத்தில் பேசுகையில் ஆறு ஆண்டுகளுக்கு அரசை யாரும் கவிழ்த்துவிடமுடியாது என்று தெரிவித்தார்.

இடதுசாரிகட்சிகள் இணைய வேண்டும் — எஸ். டி.

(கொழும்பு)

தேசிய அரசுப் பேரவையில் கம்பஹா எம்.பி திரு எஸ்.டி. பண்டாரநாயக்கா நேற்று பேசுகையில், ஒருகட்டத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜகட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஜாதிக விமுக்தி, பெரமுனை ஆகியவை ஒன்றிணைய வேண்டும் என்றும் இதற்கான முயற்சிகள் இப்பொழுதே மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தார்.

நேற்று நிகழ்ந்த கொள்ளை!

கல்வியங்காட்டில் வீடு உடைத்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

பட்டப் பகலில் வீடு உடைத்து 8 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்த சம்பவம் நேற்றுக் காலை கல்வியங்காட்டுப் பகுதியில் நிகழ்ந்தது.

கல்வியங்காட்டைச் சேர்ந்த அப்பையா தட்சணாமூர்த்தி என்பவரது வீட்டிலேயே இக் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை வீட்டுக்காரர் சந்தைக்குச் சென்றபோது, வீட்டின் யன்னல் கம்பிகளை உடைத்து, 40 சேலைகள், ஒரு தங்கச் சங்கிலி, ஒரு சோடி காப்பு, ரொக்கப் பணம் 250 ரூபா உட்பட 8 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்ததாகபொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

(6-ப்பக்கம் பார்க்க)

ஹாக்கிப் போட்டி

(அரியாலை)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஹாக்கிக் கோஷ்டிகளுக்கும், யாழ் பரி. யோவான் கல்லூரி ஹாக்கிக் கோஷ்டிகளுக்குமிடையில் யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாம் பிரிவுப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இரண்டாம் பிரிவுப் போட்டியில் 4-2 கோல்களால் யூனியன் கல்லூரி கோஷ்டி வெற்றியீட்டியது. (உ)

ஆராதனை

[அரியாலை]

யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரியும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் இணைந்து நடாத்திய கரோல் ஆராதனை சுண்டிக்குளி பரி யோவான் ஆலயத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் வணக்கத்துக்குரிய ஜே ஜே குணப்பிரகாசம் அடிகளின் ஆசீர்வாதத்துடன் ஆராதனை முடிவடைந்தது. [உ]

ஒளி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் வளாகத்தின் திருநெல்வேலி மருதனமடம் வட்டுக்கோட்டைப் பிரிவு கிறிஸ்தவ மாணவர்கள் ஒன்றுசேர்த்து 'ஒளிவிழா' நிகழ்ச்சி ஒன்றை திருநெல்வேலி இராமநாதன் மண்டபத்தில் 30ம் திகதி புதன்கிழமை மாலை அளிக்கவுள்ளனர். (கி-உ)

ஈட்டுவழக்கில் விற்பனவு ஆணை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கனகரத்தினம் நரேந்திரன்
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.
வழக்காளி

இல ஈடு/14824

எதிராக

நாகம்மணி சுந்தரம்,
201/6, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு 14824 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு மார்கழி மாதம் 29-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 4420/-வும் மேலும் ரூபா 3000/-க்கு 21-4-75 தொடக்கம் 22-7-76 வரைக்கும் 100க்கு 14 வீத வட்டியையும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை 100க்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 497/75 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 321-80. நடைபெறவேண்டிய செலவு ரூபா 96-40 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 79-55 கொடுக்க வேண்டியிருப்பதாலும்) இதில் ரூபா 1000/- செலுத்தி மிகுதி வரவேண்டியிருப்பதாலும்.

குறித்த ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நலூர் இறை:

திருபதுங்க ஆராய்ச்சிவளவு நில பர 1 குளி 12, 12ம் வீடும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு கோவிலாதனம் வடக்கு முருகேசு வீரகத்தியினாதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு சந்தையா அண்ணாமலை பெண் மனோன்மணியினாதனம். இதடங்கலும்.

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

89, முதலாம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்,
8-11-77.
7783

ஈட்டுவழக்கில் விற்பனவு ஆணை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

1. நமசிவாயம் கனகசபையும் பெண்
2. தனபாக்கியம்,
பிரதான வீதி, நீர்வேலி வடக்கு.
வழக்காளிகள்

இல. ஈடு 99

எதிராக

வயித்தி நல்லையா,
பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு 99-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு மார்கழி மாதம் 28-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

மேற்குறித்தஎதிராளிகுறித்தவழக்காளிகளுக்குரூபா6958/-வும் மேலும் ரூபா 5,000/-க்கும்7-5-76 தொடக்கம் 24-12 76 வரைக்கும்100க்கு 10 வீத வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 100க்கு 9 வீத வட்டியையும் வழக்குச் செலவு ரூபா 711/10. இதில் நடைபெற்ற செலவு ரூபா 452-10. நடைபெறவேண்டிய செலவு ரூபா 114-80. மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 144/20 கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

குறித்த ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை இக்கிறை ''நரியன்குண்டு நில பர. 2 குளி 2 5/32 இதில் கிழக்குப்பக்கமாக நில பர. 1 குளி 12 5/32 செய்பயிர் வான்பயிர்களும் கிணற்றுப்பங்கும் இதனுள் அடங்கிய வீட்டின் பாகமும் எல்லை கிழக்கு பெரியதம்பிரான்கோவில் ஆதனமும், குளமும் வடக்கு றோட், மேற்கு வயித்தி சின்னத்துரைக்கும் பெண் இராசம்மாவிற்குரிய ஆதனமும், தெற்கு சபாபதி மகள் வாலாம்பியின் ஆதனம். இதனுள் இருக்கும் கிணற்றில் பிற பங்குகள் புறநீங்கலாக (இது D 286/166ல் பதியப்பட்டுள்ளது)

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

89, முதலாம் குறுக்குத்தெரு.
7-11-77.
7784

கேள்வி விளம்பரம் — 1978

சாவகச்சேரி நகராட்சிமன்றம்

சாவகச்சேரி நகரசபைக்கு 1978-ம் ஆண்டு கீழ்க் குறிக்கப்படும் தேவையான பொருட்கள் விநியோகம் செய்வதற்கு சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளரால் முத்திரை செய்யப்பட்ட விலைக்குறிப்புகள் இரு பிரதிகளில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ந் திகதி (12-12-77) நண்பகல் 12-00 மணி வரை இவ்வலுவலகத்தில் பிணைப்பணமும் கேள்விப்பத்திரப்பணமும் கீழ்க் குறிப்பிட்டபடி செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கேள்விப்பத்திரத்திற்காகச் செலுத்திய பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. கேள்விகள் விசேட ஆணையாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி என விலாசமிட்டுத் தபால் உறையில் இடதுகை மேல்கோணத்தில் இன்னதற்கான கேள்விப்பத்திரமென்று எழுதப்பட்டு பதிவுக் கடிதத்தின் மூலம் 14-12-77-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கிடையில் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். அல்லது சபையின் கேள்விப்பத்திரப்பெட்டிக்குள் போடப்படவேண்டும்.

இவைகளைப்பற்றிய விபரங்கள் ஏதாவது தெரியவிரும்பின் அலுவலக நேரத்தில் நகரசபை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

	பிணைப் பணம் ரூ ச.	கேள்விப் பத்திரப் பணம் ரூ. ச.
1. மின்சார உபகரணங்கள்…………	50-00	25-00
2. அலுவலக பாவனைக்குரிய அச்சிடப்பட்ட படிவங்களும் புத்தகங்களும், உபகரணங்களும்…	50-00	15 00
3. சுகாதார/வேலைப்பகுதிக்குத் தேவையான பொருட்கள்………	50-00	15 00

த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
24-11-77.
7788

கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 14125 உரும்பிராய் தற்பொழுது நீர்வேலி
ஞானசேகரம் அப்புத்துரை வழக்காளி
எதிராக
இணுவில் கிழக்கு

1. கனகசபை சுப்பிரமணியமும் பெண்
2. பாக்கியம் எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் ஈடு 14125-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977ம் ௵ (14. 12. 77) மார்சழி மீ 14-ம் திகதி புதன்கிழமை முற்பகல்10—00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 4950/-ம் 3. 10. 1973 தொடக்கம் 14-11-1974 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 410/15. இதில் 4/2/77 எதிராளியின் சட்டத்தரணி ரூபாய் இரண்டாயிரம் வழக்காளியின் சட்டத்தரணியிடம் கொடுத்திருக்கிறார்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை ''நகரத்தான் பனந்தோட்டம்'' குறித்த 8417-ம் இலக்க அறுதி உறுதிப்படி நி 4, இதில் முன் அறுதி விற்றபாகம் நீங்கி மிகுதி நில. 2 குளி 8 3/4, பிறகும் குறித்த 5260ம் இலக்கப் பிரிவிடலுறுதிப்படி யாழ்ப்பாணம் D 253/144ம் இலக்கப் பதிவுப் புத்தகத்தின்படி நில. 2. குளி 15, பிறகும் குறித்த 7004ம் இலக்க அறுதி உறுதிப்படி யாழ்ப்பாணம் D 280/192ம் இலக்கப் பதிவுப் புத்தகத்தின்படி நில. 3. மூன்று பாகங்களையும் ஒன்றாகச்சேர்த்து 1966ம் ஆண்டு ஆனிமாதம் 6ம் திகதி உத்தரவுபெற்ற உலாந்தா T. கந்தையாவால் அளந்து 2215ம் இலக்கத்தில் வரையப்பட்ட படத்தின்படி 1ம், 2ம், 3ம், 4ம் துண்டுகள் ஒன்றாகச் சேர்த்த நில. 8 குளி 53/4, இதில் 2ம், 3ம், 4ம் இலக்கத் துண்டுகள், நில. 4. குளி 5 3/4 குறித்தபடத்தில் 3-ம் இலக்கத் துண்டில் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றுப்பங்கும் இதற்குள் இப்போது கட்டப்படும் கல்வீடும், பயிர்வகைகளும், இந்தப் பரப்பு 4, நாலு குளி 5 3/4 ஐந்தேமுக்காலுக்கும் எல்லை கிழக்கு புகையிரத வீதி, வடக்கு ஆறுமுகம் கைம்பெண் முத்துப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு ஒழுங்கையும் குறித்த படத்தில் 1ம் இலக்கத் துண்டும் தெற்கு குறித்த படத்தில் 1ம் இலக்கத் துண்டும் கதிர்காமு கனகரத்தினத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும் குறித்த கிணற்றில் குறித்த படத்தில் 1ம் இலக்கத் துண்டுக்குரிய தண்ணீர்பங்கும் இக்காணியின் வடக்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப்பங்கும் இக் காணிக்கூடாக வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கலாக. இதடங்கலும் அதைச் சார்ந்தவைகளும்.

நா. ஸ்ரீரங்கநாதன்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்.

6, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்;
21-11-77.
7786

வரி விளம்பரம்

தேவை

யாழ். நகரில் பிரபலமான வர்த்தகஸ்தாபனம் ஒன்றிற்கு 35 வயதிற்கு மேற்படாத, தின இருப்பு பதிவு [Daily stock-maintaining] எழுதுவதில் அனுபவம் மிகுந்த ஒருவர் தேவை. சுறுசுறுப்பும், கண்ணியமும் உள்ளவராயும் இருப்பவர் விரும்பப்படுவர் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 7787, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7787

கிளிநொச்சிப் பட்டணசபை வரியிறுப்பாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

இச்சபைக்குச் செலுத்தவேண்டிய இவ்வருடத்திற்குரிய ஆதன வரியை மார்கழிமாதம் 31ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்துமாறு வேண்டுகின்றேன்.

தவறின் செலுத்தவேண்டிய பணத்தில் 10% குற்றப்பணமாக அறவிடப்படுவதுடன் தங்களின் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை நடுக்கட்டல் செய்து அவற்றைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி.
7789

இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை - பன்னாலை வரத்தலம் கற்பகப் பிள்ளையார் கோவிலில் இலட்சார்ச்சனை அடுத்த மாதம் 4ம் திகதி ஆரம்பமாகி 12 நாட்கள் நடைபெற உள்ளன.

அடுத்த மாதம் 15ம் திகதி இறுதி நாள் விநாயக சஷ்டி தினத்தன்று பகல் சங்காபிஷேகம் நடைபெறும். (இ)

காரைநகரில் விவசாயக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விவசாயிகள் முன்னேற்றக் கருத்தரங்கு ஒன்று காரைநகர் களபூமி சுந்தரமூர்த்தி வித்தியாசாலையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய விவசாயப் போதனாசிரியர் திரு. க. இலக்கொழுந்து, ''காரைநகர் மக்கள் பயிர் செய்யக்கூடிய 1100 ஏக்கர் வயலையும் 2500 ஏக்கர் மேட்டு நிலத்தையும் இருக்கும் இயற்கை வளத்தைப் பயன்படுத்தி உபயோகிக்குமாறும் உணவுப் பொருட்களுக்கு எதிர்காலத்தில் இருக்கும் தட்டுப்பாடு பற்றியும் விளக்கிக் கூறியதுடன் மேலும் பணமுடையிலுள்ள விவசாயிகளின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் தங்கள் பயிர்ச் செய்கையைக் காண்பித்து கடன் பெறலாம்'' எனவும் விளக்கினார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் திரு. அருணம்பலம் பேசுகையில், பசளை, விதை விநியோகம், கடன் வழங்கல்முதலியவற்றை உடன் அமுல்படுத்துவதாக உறுதி கூறினார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கட்டாக்காலி மாடுகளை வயல்களில் வைத்துச் சுடுவதுடன் இறந்த மாட்டுச் சொந்தக்காரர்களிடம் இருந்து நட்டஈடு பெறுவதெனவும் தீர்மானித்தனர். (க-உ)

ஜனதா அரசைக் கவிழ்க்க இந்திரா சதி!

நிஜலிங்கப்பா குற்றச்சாட்டு

புதுடில்லி நவ. 29

ஜனதா அரசைக் கவிழ்ப்பதற்கு முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி புரட்சி சதித்திட்டங்களை மேற்கொண்டுவருகிறார்.

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் ஸ்தாபன காங்கிரஸ் தலைவருமான திரு. நிஜலிங்கப்பா தெரிவித்துள்ளார்.

தாம் மேற்கொள்ளும் சதித்திட்ட நடவடிக்கைகளுக்காகத் திருமதி காந்தி கோடிக்கணக்கான ரூபா பணத்தைச் செலவிட்டு வருகிறார் என்றும் அவர் கூறினார்.

இழந்த உரிமைகளை கடந்த லோகசபைத் தேர்தலின்போது மீட்டுக்கொண்ட மக்கள், அந்த உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் அக்கறையுடன் இருக்கவேண்டும் என்றும் திரு. நிஜலிங்கப்பா மக்களைக் கேட்டுள்ளார். (இ)

வகுப்புவாதக்கலவரங்களைத் தூண்ட தீயசக்திகள்முயற்சி

இந்திய உள்துறை அமைச்சர் பொதுமக்களை எச்சரிக்கிறார்

புதுடில்லி, நவ. 29

நாட்டில் குழப்பங்களையும் வகுப்புவாதக் கலவரங்களையும் தூண்டிவிட முயற்சிசெய்து வரும் சக்திகளுக்கு எதிராகப் பொதுமக்கள் உஷாராகஇருக்க வேண்டும் என்று இந்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு. சரண்சிங் நேற்று வானொலியிலும் டெலிவிஷனிலும் உரை நிகழ்த்தினார்.

ஜனநாயகமும் அமைதியும் ஒருங்கிணைந்து நிலவ முடியாது என நிரூபித்தே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் தீய சக்திகளுக்கு எதிராக பொதுமக்கள் உஷாராகஇருக்க வேண்டும் என்றும் திரு. சரண்சிங் கேட்டுள்ளார்.

வன்முறைக்கு இடம் அளியோம்...

வன்முறைக்கு இனிமேல் என்றுமே இடமளிக்கமாட்டோம் என்று நாட்டு மக்கள் சகலரும் தமக்குள் திடசங்கற்பம் பூணவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

திரு. சரண்சிங் தமது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அமைதிப் புரட்சி

கடந்த லோகசபை தேர்தல் நாட்டில் அமைதிப் புரட்சியை ஏற்படுத்தி 30 ஆண்டு கால ஏகபோக அதிகாரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

இந்நிலைகண்டு மனம் பொறுக்காத வசதிபெற்றவர்களும் சுயநலக்காரர்களுமே நாட்டில் கிளர்ச்சிகளையும் குழப்பங்களையும் தோற்றுவிக்க முயன்றுவருகின்றனர்.

இவ்வாறான சக்திகளை மத்திய அரசும் மாநில அரசுகளும் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. எது விதத்திலும், இச்சக்திகள் சட்டத்திற்கு தப்பமுடியாது. (இ)

கெய்ரோ மகாநாடு:

சதாத்தின் அழைப்பை அமெரிக்கா ஏற்றது

வாஷிங்டன், நவ. 29

மத்திய கிழக்கு சமாதானம் குறித்து ஆராய்வதற்காக எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத் கெய்ரோவில் கூட்ட உள்ள மகாநாட்டின் அழைப்பை அமெரிக்கா ஏற்றுள்ளது என்று வாஷிங்டன் செய்திகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான உத்தியோகபூர்வ சம்மதம் விரைவில் ஜனாப் சதாத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அச்செய்திகள் தெரிவித்தன.

ஜனாப் சதாத்தின் இம்மகாநாட்டுக்கான அழைப்பை இதுவரை இஸ்ரேலும், அமெரிக்காவுமே ஏற்றுக்கொண்டுள்ளன.

ஜோர்டான் கருத்து

மத்திய கிழக்கு விவகாரத்துடன் தொடர்புடைய சகல நாடுகளும் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும் பட்சத்தில் ஜோர்டான் கலந்துகொள்ளத் தவறாது என்று ஜோர்டான் அரசு அறிவித்துள்ளது.

ஈராக்கில் மகாநாடு

இம்மகாநாட்டுக்கு எதிராக ஈராக் தலைநகரான பக்தாத்தில் இன்னுமொரு மகாநாட்டைக்கூட்டும் முயற்சியில் ஈராக் இறங்கியுள்ளது. (இ)

மொசம்பிக் மீது றொடீஷியா தாக்குதல்; 1200 பேர் பலி!

சாலிஸ்பரி, நவ. 29

மொசாம்பிக் மீது றொடீஷியப் படைகள் நடத்திய விமானத் தாக்குதலில் 1200 மொசாம்பிக் பிரஜைகள் கொல்லப்பட்டனர் என்று றொடீஷிய இராணுவபீடம் தெரிவித்தது.

கடந்த 5 வருடங்களில் இருநாட்டினருக்குமிடையே நடைபெற்ற சண்டையில் இதுவே மிகப்பெரும் தாக்குதல்என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் இத்தாக்குதலில் 80 பேர் மட்டுமே பலியாகியுள்ள மொசாம்பிக் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் பலியானவர்களில் அநேகர் குழந்தைகளும் பெண்களுமாவர்.

பொதுமக்கள்மீது இத்தாக்குதலை நடத்தியமை குறித்து றொடீஷியாவை மொசாம்பிக் வன்மையாகக், கண்டித்துள்ளது. (இ)

புயல் நிவாரணம்திறனுடன் மேற்கொள்ளப் படவில்லை”

ஆந்திராவில் ஜனதா கட்சித் தலைவர்

ஹைதரபாத், நவ. 29

புயல்வெள்ளப்பெருக்கு நிவாரணப் பணிகளை ஆந்திர அரசு முறையாக மேற்கொள்ளவில்லை என்றும் இப்பணிகளை திறமையுடன் மேற்கொண்டிருந்தால் புயலினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து ஏற்பட்ட கஷ்டங்களிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பார்கள் என்றும் ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நிவாரணப் பணிகளின் அவசரத்தன்மையை மாநில அரசு உணரவில்லை என்றும் கூறிய திரு. சந்திரசேகர், அரசு நிவாரணப் பணிகளில் சகல கட்சிகளையும் ஈடுபடச்செய்யவில்லை என்றும் குற்றம் சுமத்தினார்.

புயல்வீசி 10 நாட்களின் பின்னரும் அநேக மனித சடலங்கள் வீதிகளில் அநாதரவாகக் கிடக்கவிடப்பட்டுள்ளது என்றும் திரு. சந்திரசேகர் கூறினார். (இ)

சுமிசிடின்

பூச்சிக் கட்டுப்பாட்டில் புதியதொரு முறை

சுமிசிடின் வேறுவிதமாகச் செயலாற்றுகிறது. இதனால்தான் சாதாரண பூச்சிக் கொல்லிகளை எதிர்க்கும் பூச்சிகளையெல்லாம் அது வெகு இலகுவாக அழிக்கிறது.

சுமிசிடின் பாவனைக்கு மிகச்சிக்கனமானது ஒரு அவுன்ஸை 20-40 கலன் நீரிற் கலக்கலாம். உங்களது மிளகாய், வெங்காயம், காய்கறி வகைகளை ''ஸ்பொடப்டெரா'' புழு, சேனைப்புழு முதலிய பூச்சிகளால் ஏற்படும் சேதத்திலிருந்து காப்பாற்ற சுமிசிடின்

சுமிசிடின்

இரசாயன ஆராய்ச்சியில் புதியதொரு கண்டுபிடிப்பு.

LANKEM

GRANT K & E 443

பூட்டோவுக்கு மலேரியா!

லாகூர் நவ.29

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் கைதாகி சிறையிலிருக்கும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோ கடந்த வாரம் சிறையில் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்று நேற்று லாகூர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாப் பூட்டோவின் வழக்கறிஞரின் இக்கூற்றை அடுத்து ஜனாப் பூட்டோவைக் கவனிப்பதற்கு விசேட டாக்டர்கள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம், ஜனாப் பூட்டோவைக் கைது செய்தது சட்டத்துக்கு விரோதமானது என்று திருமதி பூட்டோ பாகிஸ்தான் இராணுவத்திற்கு எதிராகச் சுமத்தப்பட்ட வழக்கு விசாரணை இன்று நடைபெறுகிறது. (இ)

வயோதிபர் ஏற்புக்குப் பலி

(யாழ்ப்பாணம்)

70 வயதான வயோதிபர் ஒருவர் ஏற்பு-வலியால் மரணமடைந்தார். குருநகரைச் சேர்ந்த லோறன்ஸ் மனுவல் பிள்ளையின் மரணம்குறித்து யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் விசாரணை நடத்தினார்.

காலில் காயமொன்று ஏற்பட்டு மாறியபின் காய்ச்சல் வந்ததாகவும், மயக்கமடைந்த நிலையில் யாழ். பெரிய ஆஸ்த்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் என்றும் கூறப்பட்டது.

ஏற்பு வலியினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. (க-அ)

இன்று நவசக்தி அர்ச்சனை

(யாழ்ப்பாணம்)

இணுவில் கண்ணகை அம்மன் கோவிலில் இன்று இரவு அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனை நடைபெறுகிறது. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'பத்தினித் தெய்வம்' என்னும் பொருள்பற்றி உபந்நியாசம் செய்வார் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (அ)

……

தற்காலிக நிறுத்தம்

[திருகோணமலை]

திருகோணமலைப் பிராந்திய நெற்சந்தைப்படுத்தும் சபையின்கீழ் இயங்கிவரும் கல்லாறு, கிளிவெட்டி, தோப்பூர், மூதூர் நெற்களஞ்சியங்களிலிருந்து திருகோணமலையிலுள்ள நெற்களஞ்சியங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்த நெல் இழுவை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

திருமலைப் பிராந்திய நெற்சந்தைப்படுத்தும் சபையினரால் மேற்படி நெற்களஞ்சியங்களில் வருடாந்த மதிப்பீடு நடக்க இருப்பதே இந்த இழுவை ஒத்திவைப்புக்குக் காரணமாகும்.

இந்த இழுவை கடல் மார்க்கமாகவே நடைபெற்றுவந்தது. கணக்கு மதிப்பீடு பூர்த்தியானதும் திரும்பவும் இழுவை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [உ]

பொலிசார் தாக்கினராம்

(திருகோணமலை)

துறைமுக கூட்டுத்தாபன ஊழியர்கள் துறைமுகப் பொலிஸாரினால் தாக்கப்பட்ட சம்பவமொன்று திருகோணமலையில் இரவுவேளை நடந்தது.

இது பற்றி பிராந்திய முகாமையாளர் கவனத்திற்குத் தொழிலாளர்கள் கொண்டுவந்தனர். திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர், உதவி பொலிஸ் அதிபரிடமும் முறையிடப்பட்டது.

மேற்படி ஸ்தாபனத்தின் சகல தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பாது சிலமணி நேரம் பகிஷ்கரித்தனர்.

இத்தாக்குதல் பற்றிய அணிவகுப்பு ஒன்றும் நடைபெறவிருக்கிறதெனத் தெரிகிறது. (உ)

அசகாய சூரர்கள்

(கொழும்பு)

கடை ஒன்றிற்குள் கொள்ளையடிக்கும் நோக்குடன் நுழைந்த நால்வர் கொண்ட கோஷ்டி ஒன்று துப்பாக்கிகாட்டி மிரட்டிய கடைக்காரரின் மகனையும், கடைக்காரரையும் கத்தியால் குத்திக்காயப்படுத்தியதாம்.

அத்துடன்5000ரூபரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு அக்கோஷ்டி ஓடியதாம்! மருதானையில் நடைபெற்ற இச்சம்பவம்பற்றி பொலிசார் விசாரணை புரிகின்றனர். (உ)

பாட்டா

'மோஸ்தர்களை தெரிவுசெய்யுங்கள்'

போட்டி முடிவுகள்

1-ம் பரிசு

(சிசில் குளிர்சாதனப்பெட்டி)
எஸ்.பி விக்கிரமாராச்சி,
191, ஈபேட் லேன்,
ஹல்தமுல,
மொரட்டுவ.

2-ம் பரிசு

(றெக்னிஸ் தையல்மெஷின்)
செல்வி என். நலீமா,
உப்புக்குளம்,
மன்னார்.

3-ம் பரிசு - 3 பரிசுகள்

(ஒவ்வொரு ஈஸ்ரேண் சைக்கிள்)

றேஷான் பைவா,
5, மக்லியட் ரோட்
கொழும்பு - 4

எஸ் செல்வராஜா,
70, மெயின்வீதி
பண்டாரவளை.

டபிள்யு. ஆனந்த;
2, பாங்ஷோல் வீதி
கொழும்பு - 11

4-ம் பரிசு - 6 பரிசுகள்

(ஒவ்வொரு ஜோடி தங்கத்தோடு)

எம்.எப். ஜபினுள் அப்டீன்
20, மியூஸ் வீதி
கொழும்பு - 2.

அலோஷியஸ் இராசையா
99/9, ஸ்டேஷன் வீதி
யாழ்ப்பாணம்.

ஜயரத்ன நாணயக்கார
'சிறி சிலி'
கொஸ்ஹந்தவெல, யக்கல.

எஸ். ஏபிரகாம்
54, உருத்திரா மாவத்தை
வெள்ளவத்தை.

ஜி.அமிதா நந்தனிபெர்னாந்து
38, பெரேரா ரோட்
கணுவான, ஜா - எல.

எ. பெர்னாண்டஸ்
107/8, ராபெல் இடம்
தெஹிவலை.

'யூனிக்' ட்ரான்சிஸ்ரர் சுவர்க் கடிகாரங்கள்

பி. சி. சிறிசேன
மஹா ஹெதர
வல்பொல,
பலுவத்தை.

செல்வி நந்தனி பெரேரா
மத்திய தொலைபேசி
பரிவர்த்தனை நிலையம்
கொழும்பு - 1.

('எலேற்' ட்ரான்சிஸ்ரர் றேடியோக்கள்)

சிரு. ஹேமா பமுனுவெல
1/2, பெர்னாந்து பிளேஸ்
வைத்தியா ரோட், தெஹிவலை.

கே. ஏ. புஷ்பா சாந்தி
59, சுலிசுத்தராம ரோட்
வெள்ளவத்தை.

திருமதி என். ஹம்சியா
19, லீச்மன்ஸ் வீதி,
கொழும்பு - 2

(ஒவ்வொரு ஜோடி பாட்டா சப்பாத்து)

டபிள்யு, என், எல். டி மெல்,
மாத்தளை

எஸ், எஸ். ஹேநந்த,
கண்டி

அனோஜா சுந்தரலிங்கம்,
அராலி

எல். கார்டியாராச்சி,
கிரிபத்கும்புற

ரூஜினி கிறிஸ்ரோபர்,
யாழ்ப்பாணம்

ஏ. சி, வஹப்,
கம்பளை

அசிலடா விக்கிரமசிங்க,
பலாங்கொடை

என். ஜி. லலிதா டி. சில்வா
மொரட்டுவ

டி. ஈ. புலிசேன,
களனி

லதா ஹேமமாலி விஜயரத்ன
நுகேகொடை

N. A. K. ஐராங்கனிநிஷங்கா
மீரிகம

டிரேஹி டி, லனோல்
நுகேகொடை

றஞ்சனி ஜோர்ஜ்
தெமட்டகொடை

சிறியலதா றனசிங்ஹ
கொச்சிக்கடை

அப்துல் ரகுமான்
ஹந்தெஸ்ஸ

எம், இராஜேந்திரன்
இரத்தினபுரி

பிறியதர்ஷன டி. சில்வா
அநுராதபுரம்

எஸ். சிவபாலன்
சாவகச்சேரி

திருமதி என். சற், ஹைசர்
கொழும்பு - 10

திரேசா ஜயதிலக
ஜா-எல

அமர குணரத்ன
தங்காலை

எச். எம், ஜயந்த குமார
குணபான

ஊதேவி வெலிவிற்ற
கொழும்பு-3

கோதபாய எச், லியனகே
வெல்லம்பிட்டி

சமன் ஜயதிலக்க
கட்டுகஸ்தோட்டை

எம். றேணுகா குறே
களுத்துறை

பெர்னாட் டயஸ்
களனி

டி. ஓ. சி. வீரரத்ன
ஹிக்கடுவை

அன்ரன் பி. மெண்டிஸ்
டங்கொட்டுவ

W. லயனல் பொன்சேகா
ஹங்குறன்கெர

எஸ். சாரதாதேவி
அளவெட்டி

செல்வன் ரேய் ஒபதா
கம்பஹா

செல்வி ஷராலட் தொலீக்
இரத்மலான

ஃபாலிஹ் ஃபாலீல்
பம்பலப்பிட்டி

எஸ் ஆர். ரமணன்
வவுனியா

எஸ். ஆர். உமசுதன்
வவுனியா

எம், சவேரியம்மா
கொழும்பு-10

எம். சி. ஜயசேன
காலி

சேனா கன்னங்கரா
கொடக்கவல்ல

செல்வன் ரேஷன் ஒபதா
கம்பஹா

திருமதி அனுலா திலகவர்தன
நுகேகொடை

பிறிதிராஜ் டயஸ்
மொரட்டுவ

செல்வி பாத்திமா ஷெரிவ
கொழும்பு - 6

றுலேனி செனிவர்த்தன
ராஜகிரிய

ஜோய் அகுஸ்தின்
கொழும்பு - 13

பாத்திமா லறிஹா,
நரமல

திருமதி லசீரா லியனகே
கொழும்பு - 3

சின்யு லீ
மருதானை

பி. எம், மாரூப்
சிலாபம்

பிறியந்த புததாச
கந்தானை

பி. எல், பத்திரன
நுகேகொடை

தமாரா குணசேகர
மஹரஹம

நியாஸ் ஹசான்
கொழும்பு - 14

யு. பி. அரியதாச
இமதுவை

நிமால் அமரசூரிய
மொலகொடை

ஜயதேவ பெரேரா
கொழும்பு - 6

மங்கள பிரியதர்ஷினி
கொட்டாஞ்சேனை

சி. எல். சி. டி. மெல்
மொரட்டுவ

எஸ். ஜயரத்தினம்
பதுளை

எச். ஜி. சுகததாச
ஹந்தெஸ்ஸ

பி. மானெல்
தெஹிவலை

செல்வி நிலானி குரூஸ்
நானாட்டான் (வழி)
முருங்கன்

மல்லிகா செனிவரத்தன
நுகேகொடை

ரி. டி. திஸ குணசேனா
வெல்லம்பிட்டி

எல். யு. ஆர். சிறியவன்ச
காலி

டி. கே. டி. விஜயசூரிய
களுத்துறை

சந்திரா வீரசிங்க
மஹரகம

சமீதா பெர்னாந்து
மொரட்டுவ

திருமதி மறினி ஆனந்தப்பா
கந்தானை

விஜே றொட்றிகுஸ்
கொழும்பு-5

செல்வி சிதுமினி குடாகம
மொரட்டுவ

பிரேமகீர்த்தி ஜெயசேனா
இரத்தினபுரி

மாலினி மல்லிகம
நுவரஎலியா

ஆர். சந்திரதாச சில்வா
பசறை

வி. விக்கினேஸ்வரன்
தம்பிலுவில்

எம். ரி. சுலினிதா டி. சில்வா
கண்டி

எ. எச். மஹிந்த
பத்தேகம

விக்ரர் பீரிஸ்
அததிடிய

பி. கே. சமன் ஹேவந்த
நுகேகொடை.

திருமதி. பி. ஒலோவ்
பொலன்னறுவை

சுமித்ரா கலஹே
தல்பே

கே. ஜே. றெக்ஸ பெரேரா
நீர்கொழும்பு

ஓஃபீலியா ஒபசேகரா
கட்டுஹஸ் தோட்டை

என். சிவசீலன்
யாழ்ப்பாணம்

ரி. பி. லன்டிசேன
ராஜகிரிய

விஜிதா வெற்றிவேலு
திருகோணமலை

ஏ. ஜே. காரியவாசம்
காலி

எம், நிலாம் அலி
கொழும்பு-2

விமலா சமரக்கூன்
பதுளை

டபிள்யு எல்.எம். காமினி
செனிவரத்ன
ஹெற்றிமுல

சி. கலைச்செல்வி
உரும்பிராய் வடக்கு

ஏ. பி. கருணபால
வலஹந்துவ

டி. கே. கருணபால
கொழும்பு

பி. ஏ. டி. சுனேத்ரா
கட்டுநாயக்கா

திரு. வி. எல். ஜே. டி. மெல்
கொழும்பு-12

செல்வி நயீமா அஹமட்
கண்டி (வழி)
ஹந்தெஸ்ஸ

ஜே. விக்கிரமசிங்ஹ
கொழும்பு-8

ஹெதர் கொட்லிங்
கொழும்பு

திலகசிறி விதாராச்சி
வெல்லம்பிட்டி

றன்ஸ்லே சொலமன்ஸ்
தெஹிவலை

விழிப்புலனிழந்தோர் பாடசாலைக்கு இன்று

அடிக்கல் நாட்டு விழா

> ''ஒருமைக்கண் தான் கற்ற
> கல்வி ஒருவற்கு
> எழுமையும் ஏமாப்பு
> உடைத்து!''

ஒருவன் ஒரு பிறப்பிலே கற்ற கல்வியானது அவனுக்கு ஏழு பிறப்பிலேயும் சென்று பயனை அளிக்குமென வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். உலகத்தில் மக்களாகப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் கல்வி கற்றுச் சிறப்புடன் திகழ வேண்டும். நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையும் கல்வியைப் பெறவேண்டுமென்பதற்காக அந்தந்த நாட்டு ஆட்சிமன்றங்கள் அதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துகின்றன.

நமதுநாட்டில் புலனிழந்தவர்களுக்கான கல்வி ஆரம்பிக்கப்பட்டு இன்று அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாகிவிட்டது. இவர்களுக்கான பாடசாலைகள் அரசாங்கத்தின் உதவியுடன் மதநிறுவனங்களால் தொடக்கி நிருவகிக்கப்பட்டு வருகின்றன. இதில் இலங்கையில் உள்ள தமிழ்ப் பிள்ளைகளுக்காகக் கிறிஸ்தவ மதத்தவரால் தொடக்கி இயங்கிவருவது நவீல்ட் செவிடர் குருடர் பாடசாலை ஒன்றேயாகும். கைதடியில் உள்ள இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுத் தற்பொழுது இருபது வருடங்களாகின்றன. இவ்வளவுகாலமும் செவிப்புலனும் - விழிப்புலனும் இழந்த மாணவர்கள் ஒரே கட்டிடத்திலிருந்து தமது கல்வியைப் பெற்றுவருகின்றார்கள். இன்று புதன்கிழமை விழிப்புலன் இழந்த மாணவர்களுக்கென தனியான ஒரு பாடசாலையை அமைக்கும் திட்டத்தில் அதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெறுகின்றது.

ஜேர்மனியர் நன்கொடை

இக் கட்டிடத்தை அமைப்பதற்கான நிதியின் ஒரு பகுதியை ஜேர்மன் விழிப்புலன் இழந்தோர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஜோர்ஜ் கயின் றொக் வழங்கியுள்ளதுடன் கட்டிடத்துக்கான அடிக்கல்லையும் அவர் நாட்டிவைப்பது யாழ்ப்பாணத்து விழிப்புலன் இழந்தோருக்குக் கிட்டிய ஒரு வரப்பிரசாதமாகும். வெளிநாட்டவர் நம்மவர்க்கு என்றும் உதவிசெய்யக் காத்திருக்கின்றார்கள். திரு. ஜோர்ஜ் கயின் றொக்கின் கொடை அந்த நாட்டு மக்களின் அன்பை எமக்குப் பிரதிபலிக்கின்றது.

அவரின் உதவியினால் உருவாகப்போகும் இந்தவிழிப்புலன் இழந்தோர் பாடசாலையை இலங்கையில் உள்ள விழிப்புலன் இழந்த தமிழ்ச்சிறுவர்கள் பயன்படுத்தித் தமது வாழ்க்கையைச் சிறப்படையச் செய்யவேண்டும்.

விதி என்று இருக்காதீர்

யாழ்ப்பாணத்திலேயே நூற்றுக்கான விழிப்புலன் இழந்த சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கின்றார்கள் என்று அறிகின்றோம். அவர்கள் கல்விபெற சமூகசேவை நிறுவனங்களும் அயலவர்களும் சமுதாயமும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும், பெற்றோர் தமது பாவவினையால் வந்த பலன் என்று கருதி விழிப்புலன் இழந்த பிள்ளைகளைக் கல்விகற்கவிடாது வீட்டில் வைத்திருப்பின் அது அவர்களுக்குச்செய்யும் பெரும் துரோகமாகும்.

அரசு கட்டாயப்படுத்த வேண்டும்

அரசாங்கம் புலனிழந்தவர்கள் கல்வியைக் கட்டாயப் படுத்தி அவர்கள் கல்விபெற மேலும் பல வசதிகளை இதற்கென இயங்கும் பாடசாலைகளுக்கு அளிக்கவேண்டும். இவர்கட்கென வேலைவாய்ப்புத் திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். இவர்களும் இந்நாட்டின் சகல உரிமைகளும் பெற்ற பிரஜைகள் என்பதை மறந்துவிடாமல் இவர்கள் விடயத்தில் மேலும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

— அனுதாபி

யாழ். இந்து முதலிடம்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்ப் பிரிவு விஞ்ஞான அறிவுப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இப்போட்டியை இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் விஞ்ஞானப் பிரபல்யாக்கக் குழுவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இணைந்து நடாத்தின.

யாழ்ப்பாணத்தில் மாவட்ட ரீதியில் 21 பாடசாலைகள் பங்கு பற்றிய இப்போட்டியில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகக் கொழும்பு வளாகத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் வேறு ஏழு பாடசாலைகளுடன் போட்டியிட்டது.

கால் இறுதிப் போட்டியில் கண்டி மகளிர் கல்லூரியை 10-3 புள்ளிகளினாலும் அரை இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியை 11-6 புள்ளிகளினாலும் இறுதிப்போட்டியில் கல்கிசை சென்ற் தோமஸ் கல்லூரியை 10-5 புள்ளிகளினாலும் யாழ்இந்து தோற்கடித்தது.

ப. ஜெயக்குமார் தலைமை தாங்கிய இந்துக்கல்லூரிக் குழுவில் ப. பிரபாகரன், சி. குகப்பிரசாதம், க. சிவசுதன், என். ரஞ்சன், ஞா. ஞானக்குமாரன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அகில இலங்கை ரீதியில் முன்னரும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இப்போட்டியில் முதலிடத்தைப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

நூல்கள் வாங்க நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

சாவகச்சேரி நகரசபை, ஏழைமாணவர்களுக்கு இலவச நூல்கள் வழங்குவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளது.

இந்நூல்களை வழங்குவதற்கு ஏழைப் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. (அ)

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
MAXIMILIAN SCHELL...DIANE BAKER
in
"Karakatoa East of Java"
Cinerama wide screen 70 m. m. [Techni color]

கலை
ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

RIO (Jaffna) Daily 10-30 4-45 7-15&9-45 P. M.
THE RAILWAY CHILDREN
(Wonderful Family Entertainment)
Special school shows at 1-30 P. M. by prior arrangement.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

8-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, ஜெயசித்திரா
நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ். நகர்) போன்; 7693
நீதிக்கு தலைவணங்கு

ஆசிரியருக்குக் கடிதம்!

மானிப்பாய் வீதியின் அவலநிலை

யாழ்ப்பாணத்தின் முக்கிய வீதிகளில் ஒன்றான மானிப்பாய் வீதி மிகவும் சீர்கேடான முறையில் உள்ளது. இவ்வீதி பெரிய குண்டும் குழியுமாக இருப்பதால் போக்குவரத்து மிகவும் சிரமமாக இருக்கிறது. குறிப்பாக பாதசாரிகள் இவ்வீதியால் செல்லப் பயப்படுகின்றார்கள். வீதிகளில் மழைநீர் தேங்கி நிற்பதால் வாகனங்கள் வந்து தங்கள் உடைகளை அசுத்தமாக்கிவிடுமோ என அங்கலாய்க்கிறார்கள். இடப்பக்கத்தில் செல்ல வேண்டிய வாகனங்கள் வலப்பக்கம் குண்டுகுழி இல்லாமல் இருக்கும் இடங்களில் வலப்பக்கமாக செலுத்தப்படுவதால் வாகனங்கள் பாதசாரிகள் மேல் மோதக்கூடிய அபாயமும் உள்ளது.

மேலும் இவ்வீதியின் சீர்கேடுகள் காரணமாக பஸ் வண்டிகள் அடிக்கடி பழுதடைந்து டிப்போவுக்கு செல்கின்றன. இதனால் அராலி, வட்டுக்கோட்டை, காரைநகர், சித்தன்கேணி, சங்கானை, மானிப்பாய், இளவாலை, சில்லாலை, கீரிமலை செல்லும் பிரயாணிகளின் பஸ் சேவையும் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகின்றது.

இவ்விதம் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் உலைவைக்கும் இவ்வீதி சீர்கேட்டை சரிப்படுத்தி பொது மக்களுக்கு உதவவேண்டுமென நெடுஞ்சாலைகள் அமைச்சை பணிவன்பாக வேண்டுகிறேன்.

ரவிகுமார்.
யாழ்ப்பாணம்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
கமலஹாசன் - தீபா
அந்தரங்கம்

4-ந் திகதி வரை
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

"ஸ்டான்லிக்கல்லூரி அதிபர் சேவையை நீடிக்குக"

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபரின் சேவைக்காலத்தை மேலும் நீடிக்குமாறு நல்லூர்த் தமிழ் மாணவர் பேரவை கல்வி அமைச்சைக் கோரியுள்ளது. அதிபர் திரு. ஜே. அரியரத்தினம் இந்த ஆண்டுடன் ஓய்வு பெறவிருக்கிறார். இதற்கான அறிவித்தல் கல்விப்பகுதியினரால் அனுப்பப்பட்டுள்ளது. இவரது சேவையை நீடிக்குமாறு நல்லூர் மாணவர் பேரவையின் சார்பில் அதன் தலைவர் என். ரி. ஜெகன் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:-

"தன்னலமற்ற சேவையாற்றும் அதிபர்களின் திரு. ஜே. அரியரத்தினமும் ஒருவர். இதனை மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் அறிவர். அவ்வாறான சேவையை அவர் இக்கல்லூரிக்கு ஆற்றியுள்ளார். எனவே அவரின் சேவை அவரது 55 வது வயதில் முடிவடைகின்றபோதிலும் அவரின் சேவையை அக்கல்லூரி மாணவ சமுதாயம் மேலும் சில ஆண்டுகளாயினும் பெற்றுப் பயனடைய உதவுக" (அ)

மீனவர்சமாஜ—சங்கப் பிரச்னைக்குத் தீர்வு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கோவிற்பற்று கூட்டுறவுத் மீனவர் சங்கத்திற்கும் யாழ்ப்பாணம் மீனவர் கூட்டுறவுச் சமாஜத்திற்குமிடையில் நிலவிவந்த பிரச்னை சங்கானை மக்கள் வங்கி முகாமையாளரினால் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்டது. குடைவலை பெறுதல், மாற்றத்தக்க ரூபாய் நாணயம், அந்நிய செலாவணி ஆகியவற்றை மீனவர் சங்கத்திற்கு என்ன விகிதாசாரத்தில் பகிர்ந்து கொடுப்பது என்ற பிரச்னை கடந்த பலமாதங்களாக நிலவிவந்தது. இது சம்பந்தமாக நடைபெற்ற விசேஷ கருத்தரங்கில் இப்பிரச்னைக்கு முடிவுகாணப்பட்டது.

சங்கத்தினதும் சமாஜத்தினதும் நலன் கருதி இவை கொடுபடவேண்டுமென்றும், அதே நேரத்தில் சமாஜமும் இயங்குவதற்கு ஒரு கணிசமான கமிஷன் கொடுக்க வேண்டுமென்றும் சமாஜத்திற்கும் சங்கத்திற்குமிடையில் ஐக்கியம் நிலவவேண்டுமென்றும் இதுவே கூட்டுறவின் தத்துவமென்றும் சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. பொ. கதிர்வேலாயுத பிள்ளை தெரிவித்த யோசனை கருத்தரங்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இக்கருத்தரங்கில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ரி. திருநாவுக்கரசு, மானிப்பாய்த் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம், கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. ஜெயகாந்தன், சமாஜத்தலைவர் திரு ஜெகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். தொழிலாளரின் நன்மை கருதி உடனடியாகச் சங்கத்திற்குக் குடைவலைகளை விநியோகிக்க ஏற்பாடு செய்வதாக உதவி ஆணையாளர் திரு ஜெயகாந்தன் தெரிவித்தார். (அ)

பொலிஸ் கோஷ்டி தோற்றது

(வவனியா)

வவனியா மகாவித்தியாலய உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் வவனியா பொலிஸ் கோஷ்டிக்குமிடையில் வவனியா மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 4-1 கோல்களால் வவனியா மகாவித்தியாலய கோஷ்டி வென்றது.

திரு. கே. குலராஜேந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [உ]

• • •

நெஞ்சுவலியால் மரணம்

(யாழ்ப்பாணம்)

லொறியைச் செலுத்திச் சென்ற சாரதி ஒருவர் நெஞ்சுவலி ஏற்பட்டு உடன்மரணமானார். 3 பிள்ளைகளின் தந்தையான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நவரத்தினம் தெய்வேந்திரன் (வயது 25) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ். அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

சம்பவதினம், நண்பகல் லொறியைச் செலுத்திவந்த போது நெஞ்சுவலி ஏற்பட்டதாகவும், உடனடியாக மரணமானார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணையின்பின் இயற்கை மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [க-அ]

இன்று

(திருநெல்வேலி)

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிளைக் கட்டிடம், கோண்டாவில் அன்னுங்கையில் சங்கத் தலைவர் திரு. ஏ. எம். எம். குலநாயகத்தினால் இன்று திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

* * *

சென்னை, நவ. 29

பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், நாளை புதன்கிழமை சென்னைக்கு விஜயஞ்செய்து புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானம் மூலம் பார்வையிடுவார்.

தமிழ்நாடு புயல், வெள்ளம் காரணமாக ஆரம்பிக்கப்பட்ட முதலமைச்சர் நிவாரண நிதிக்கு நேற்று வரை மொத்தம் 41 லட்சத்து 37,810 ரூபா சேர்ந்துள்ளது.

மரண அறிவித்தல்

தம்பிமுத்து சதாசிவம்

நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த தம்பிமுத்து சதாசிவம் காலமாகிவிட்டார். இவர், சரஸ்வதியின் அன்புக் கணவராவார். அன்னாரின் பூதவுடல் 1010/28, கே. கே. எஸ். வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து (30-11-77) புதன்கிழமை மாலை 5 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்: ஆ. கணபதிப்பிள்ளை.
7793

சாந்தி (யாழ். நகர்) போன்; 7642.
தினசரி 5 காட்சிகள்.
10-30, 2-30, 4-45, 7-00 9-30.
A Grand Release!
"UP POMPAI" [Color]

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.

மணிவாக்கு

ஓர் இலட்சியத்தைக் கடைப்பிடியாது வாழ்பவன், சுக்கானில்லாத கப்பலுக்கு நிகராவான்.

—காந்திமகான்.

ஈழநாடு
The Eelanaadu

பிரதமரின் வேண்டுகோள்!

நாட்டு மக்களில் எத்தனை பேர் குறைந்த வருமானம் பெறுகிறார்கள்; எத்தனைபேர் வேலையில்லாமலிருக்கிறார்களென்பதை அறிவதற்காக எடுக்கப்படவிருக்கும் கணக்கெடுப்பு முடிந்ததும் தேவையெனக் காணப்படுவோருக்கு சம்பள உயர்வு, வாழ்க்கைப்படி உயர்வு ஆகியவற்றின் மூலம் உதவி யளிக்கப்போவதாகப் பிரதமர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் உறுதியளித்திருக்கிறார்.

நாடு அபிவிருத்தித் துறையில் வேகமாக முன்னேறிச் செல்ல வேண்டுமென்றும் அதனைச் செய்வதிலேயே அரசு முனைந்துள்ளதென்றும் பிரதமர் எடுத்துக்கூறி இந்த முயற்சியில் தங்களுடன் ஒத்துழைக்கும்படி சகல அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஆட்சிபீடத்துக்கு வரும் அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் நாட்டின் சகல பிரச்னைகளுக்கும் தீர்வுகாண்பதே தங்கள் இலட்சியமென்றும் இதற்கு இதர அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோருவதும் நாட்டு மக்கள் நன்கு அறிந்த விஷயம்.

அரசாங்கத்தின் செயல்களில் மக்களுக்குச் சிலது திருப்தியளிக்கவில்லையெனக் கண்டால் அந்தச்சந்தர்ப்பத்தை அரசியல் கட்சிகள் சிக்கெனப் பிடித்துக்கொள்வதும் நாடறிந்த விஷயம்.

என்றாலும் திரு ஜே. ஆர். தலைமையிலான ஐக்கியதேசியக்கட்சி ஆட்சிக்கு வந்து சிலமாதங்கள்தான். இதற்குள் தேர்தல் கலவரம்; இனக்கலவரம், வெள்ளம் என்று பல பிரச்னைகள்.

அரசாங்கத்துக்கு சில வருடங்களாவது அவகாசம் கொடுத்துப் பார்ப்பதில் தவறில்லையே.

மணியன் விஜயம்

(கொழும்பு)

'ஆனந்த விகடன்' மணியன் இலங்கை வந்துள்ளார்.

விரைவில் வெளிவரவிருக்கும் "இதயம் பேசுகிறது" ஆசிரியரான திரு. மணியன் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

30 வருட..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அட்டகாசம் புரிந்துவருகின்றனர். நான் யாழ். ஒளாகத்துக்குச் சென்றபோது பொலிஸாரினல் பயமுறுத்தப்பட்டதுடன் எனது காரும் சேதப்படுத்தப்பட்டது'' என்று புகார் தெரிவித்தார்.

கல்வியங்காடு...

[1ம்பக்கத் தொடர்ச்சி]

இக்கொள்ளை தொடர்பாக அதேயிடத்தைச் சேர்ந்த முத்துச்சாமி ஆசீர்வாதம் என்பவரைக் கைதுசெய்த கோப்பாய்ப் பொலிஸார், திருட்டுப்போன பொருட்களிலிருந்து 'கசெற்' வானொலி ஒன்றையும், சேலைகளையும், நகைகளையும் கைப்பற்றியுள்ளதோடு, இக்கொள்ளை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் முத்திரைச்சந்தையைச் சேர்ந்த ரோய் என்பவரையும், கண்டிக்குளியைச் சேர்ந்த ரகுநாதன் என்பவரையும் தேடி வலை விரித்துள்ளனராம்.

இக்கொள்ளை தொடர்பாகப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. எஸ். எம். ஐயாத்துரை தலைமையிலான ஜோஷ்டியினர் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கா)

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவை குறித்து விசாரணைசெய்யப்படும் என்று பொதுநிர்வாகம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜயவிக்ரம நேற்று தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்தார்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர். மற்றச் சந்தேகநபரான துரையப்பா பாலசுப்பிரமணியத்தைச் சாட்சிகள் எவரும் அடையாளம் காட்டவில்லை.

சந்தேகநபர்கள் இருவரும் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் நீதவான் திரு நவரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். நீதவான் சந்தேகநபர்களை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். [க)

யாழ். நகரில்
எஸ். பி. சாமி அன் கொம்பனி
கிளை நிறுவனம்
193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலைய வடக்குவீதி)
திறப்புவிழா
இன்று [30-11-77] புதன்கிழமை
காலை 9 மணிமுதல் 9-30 மணிவரையுள்ள சுபநேரத்தில்
யாழ்ப்பாணத் தொகுதி தேசியஅரசுப் பேரவை உறுப்பினர்
திரு. வெ. யோகேஸ்வரன்
அவர்களால் திறந்து வைக்கப்படுமென்பதை
வடமாகாண மக்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
இவ்விழாவில் கலந்து சிறப்பிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
எஸ். பி. சாமி அன் கோ, கொழும்பு.
யுனைட்டெட் மேர்ச்சன்ட் லிமிட்டட், கொழும்பு.
மரைக்கார் லங்கா லிமிட்டட், கொழும்பு—கண்டி.
ஹெம் புரடக்ஷன்ஸ், கொழும்பு.
அரச உரக்கூட்டுத்தாபனம், சீமெந்துக் கூட்டுத்தாபனம், பலவகை கிருமிநாசினி உற்பத்தி ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களும், கால்நடைஉணவு சாய்ப்புச்சாமான், மளிகைச்சாமான், மருந்து வகைகளின் வடபகுதி விநியோகஸ்தர்களும்.
பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலை 3-45 மணிக்கு எமது விசேட வானொலி நிகழ்ச்சியான வரணியூரானின் "குளறி கந்தையா" நகைச்சுவை நாடகத்தைக் கேட்டு மகிழலாம்.

வட இலங்கை விவசாயிகட்கோர் நற்செய்தி
★ செத்தல் மிளகாய் ★ வெங்காயம் ★ உருளைக்கிழங்கு ★ கடலை ★ பயறு வகை போன்ற உங்களின் உற்பத்திப் பொருட்களைக் கொழும்பில் கூடிய விலையில் விற்றுக்கொடுப்பதற்கு
நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்:
அரசன் கொம்பனி
72 ஏ, நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 29407

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as News paper in Sri lanka.